## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

நாள் 21.11.2025

அசல் வழக்கு எண். 128/2014

வா.சா.2 – மூர்த்தி , த/பெ. நயினா

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

பழனிச்சாமியின் அப்பா பெருமாள் என்பவருக்கு சில சொத்துக்கள் பாகப்பிரிவினை வாயிலாக பூர்வீகமாக கிடைத்தது என்றால் சரிதான். அவர் பெயரில் பூர்வீகமாக கிடைத்த சொத்துக்களில் இருந்து வந்த வருவாயைக் கொண்டு சொத்து வாங்கினார் என்றால் சரிதான். பழனிச்சாமி என்பவருக்கு 1984 இல் வேலை கிடைத்து வெளியே சென்று விட்டார் என்றால் சரிதான். அவருக்கு என்ன வேலை கிடைத்தது என்றால் கிராம நிர்வாக அதிகாரி வேலை கிடைத்தது. வாதி 1984 ஆம் ஆண்டு முதல் வாலாஜாபாத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். தற்போதும் அங்கு தான் வசிக்கிறார் என்றால் சரிதான். அம்மாவாசை கங்காதரன் கிராமத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பெருமாள் எப்பொழுது இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது அப்பொழுது எனக்கு சின்ன வயசு. கங்காதரன் அமாவாசை என்ன வேலை செய்து என்ன சொத்து வாங்கினார்கள் என்றால் தெரியாது. 1988 ஆம் ஆண்டு கூர் சீட்டு எழுதப்பட்டது என்று சொல்கிறீர்கள் அது பழனிசாமி சொல்லி தான் தெரியும் என்பார் சரிதான். நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கூர் சீட்டு பதிவு செய்யவில்லை என்று கூறுவது உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த கூர்ச்சீட்டை வைத்து தான் பஞ்சாயத்து செய்தோம். அந்த கூர்ச்சீட்டில் அனைவரும் கையொப்பம் போட்டார்களா என்றால்

போட்டார்கள். அதுபோல் அந்த கூர்ச்சீட்டு எதுவும் எழுதவில்லை என்றால் சரியில்லை 1990 ஆம் ஆண்டு மறுபடியும் ஒரு கூர்ச்சீட்டு எழுதியதாக சொல்கிறீர்கள் அதை நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அதில் நீங்கள் கையொப்பம் போட்டதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். கூர்சீட்டில் வழக்கு சொத்து சம்பந்தமாக எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பெருமாள் மற்றும் அவரது மனைவி சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கு பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரிதான். அமாவாசை, பழனிச்சாமி, கங்காதரன் ஆகியோர் தனித்தனியாக கிரயம் பெற்ற சொத்துக்கள் குறித்து பஞ்சாயத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். பெருமாள் மற்றும் அவரது மனைவிக்கு சொந்தமான சொத்துக்களை அவரது வாரிசுகள் அனைவரும் சரி சமமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று தான் பஞ்சாயத்து என்றால் சரியல்ல ஆண் வாரிசுகளுக்கு மட்டும் பிரித்து கொடுப்பதாக சொன்னார்கள். ஆண் வாரிசுகளுக்கு மட்டும் சொத்து என்று கூறியதற்கு கங்காதரன் அமாவாசை உடன்படவில்லை என்றால் உடன்பட்டுதான் கையொப்பம் போட்டார்கள். 1984 ஆம் ஆண்டு முதல் வாதி பழனிச்சாமி சொத்துக்களை எதையும் அனுபவிக்கவில்லை என்றால் சரிதான் அமாவாசையும் கங்காதரன்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவருக்கு அரசு வேலை கிடைத்ததால் சொத்துக்கள் வேண்டாம் என்று சென்றுவிட்டார் என்றால் சரியில்லை. வாதியின் தகப்பனார் 1979 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் தெரியாது. அவர் இறந்து 40 ஆண்டுகளாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு போட்டுள்ளார் கிராமத்து பஞ்சாயத்து பேசி ஒத்துக்கொண்டார். பஞ்சாயத்து பேசியதாக கூறுவது தவறு என்றால் சரி இல்லை பழனிச்சாமிக்காக பொய் சாட்சி என்று சொல்கிறீர்கள்

**என்றால் சரியல்ல. கூர்சீட்டில் சாட்சி கையொப்பம் போட்டது பொய் என்றால் சரி இல்லை. சாட்சி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram